**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 19/2024**

**Prosecution Witness 1 (LW 1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சுடலை வேல் முருகையா | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | | தொழில் | : | உதவி இயக்குநர், |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.02.2025

( எதிரி ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு ஓட்டுநர் உரிமம் மூலம் ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**2 முதல் 8 எ.த.கு.வி: தொடர்ச்சி**

| | |
|---|---|
| கேள்வி | 25.10.2013 ஆம் தேதி 4ம் எதிரி நிறுவனத்தில் மாலை 04.30 மணிக்கு ஆய்வை ஆரம்பித்து எத்தனை மணிக்கு முடித்தீர்கள்? |
| பதில் | மாலை 06.30 மணிக்கு. |
| கேள்வி | அப்போது அந்த நிறுவனத்தில் யார் யார் இருந்தார்கள். ? |
| பதில் | 6வது எதிரி மருந்து விற்பனையில் தகுந்த வாய்ந்த நபராக அங்கே பொறுப்பில் இருந்தார். |
| கேள்வி | அந்த கடை பங்குதாரர்கள் யாரும் அங்கே இல்லை என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | நீங்கள் யாருக்கும் அறிவிப்பு கொடுத்தீர்களா ? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | நான்காவது எதிரி நிறுவனத்தில் நீங்கள் சென்ற உடன் அதன் பிறகு யாருக்கம் அறிவிப்பு கொடுத்தீர்களா ? |
| பதில் | இல்லை. |

| | |
|---|---|
| கேள்வி | அந்த நிறுவனம் சம்பந்தமாக ஆய்வு புத்தகம் எதவாது பார்த்தீர்களா ? |
| பதில் | ஞாபகமில்லை. |
| கேள்வி | உங்கள் ஆய்வு அறிக்கையில் படிவம் 35 ஆய்வு புத்தகம் பற்றி குறிப்பிட்டு உள்ளீர்களா? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | நீங்கள் ஆய்வு செய்யும் போது அந்த கடையின் உரிமம் செல்லத்தக்கதாக இருந்தது என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அந்த கடையில் பல நிறுவனங்களின் தயாரிப்பு மருந்துகள் இருந்தது என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அன்றைய தினம் 1 வது எதிரி நிறுவனத்தின் மருந்து பொருள் எடுத்தீர்களா ? |
| பதில் | 25.10.2013 ல் ஒன்று மட்டும் எடுத்தேன். |
| கேள்வி | அதற்கடுத்து எப்போது ஆய்வு செய்தீர்கள் ? |
| பதில் | 04.11.2013 அன்று ஆய்வு செய்து இரண்டு மருந்துகள் எடுத்தேன். |
| கேள்வி | மேற்படி 3 மருந்துகளின் பகுப்பாய்வு அறிக்கைகள் உங்களுக்கு கிடைத்தது என்றால் ? |
| பதில் | சரிதான். அந்த அறிக்கைகளில் தரம் இருந்தது என வந்தது. |
| கேள்வி | 4 வது எதிரியின் நிறுவனத்தி'ல் எடுக்கப்பட்ட பகுப்பாய்வுக்கு எடுக்கப்பட்ட படிவம் –17 மற்றும் முடக்கம் செய்யப்பட்ட மருந்துகளுக்கு தயாரிக்கப்பட்ட படிவம் –15 ஆகியவைகளில் தனியார் சாட்சியம் யாரும் உள்ளனரா ? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | 4 வது எதிரியின் நிறுவனத்தில் மேற்படி படிவம்–17 மற்றும் படிவம் –15 ல் குறிப்பிட்டுள்ள மருந்துகளுக்கான கொள்முதல் ரசீது அன்றே உங்களிடம் கொடுக்கப்பட்டது என்றால் ? |
| பதில் | 25.10.2013 அன்று கொடுக்கப்பட்டது. |
| கேள்வி | பகுப்பாய்வுக்கு எடுக்கப்பட்ட மருந்து பொருள்களின் அதிக பட்ச சில்லரை விலை கொடுத்து மாதிரி எடுத்தீர்களா ? |
| பதில் | ஆம். அவர்கள் மருந்துக்கான கேட்ட தொகையை கொடுத்தேன். |
| கேள்வி | நீங்கள் மருந்துக்கான அதிக பட்ச விலை கொடுத்து வாங்கவில்லை என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | 4 ம் எதிரி கொள்முதல் செய்த நிறுவனம் உரிய உரிமம் பெற்று இருந்தது என்றால் ? |

| | |
|---|---|
| பதில் | சரிதான். |
| கேள்வி | நீங்கள் எடுத்த மருந்து பொருளில் எப்படி பேக்கிங் செய்யப்பட்டதோ அப்படியேதான் வாங்கி விற்பனை செய்யப்பட்டதா என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | கொள்முதல் செய்த மருந்து பொருளை 4 வது எதிரி சரியான முறையில் பாது காப்பு செய்து விற்பனை செய்துள்ளார் என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | மருந்த பொருளின் தரத்தை பொறுத்து தயாரிப்பாளர்தான் மருந்து சம்பந்தமாக குறைபாடு இருந்தால் அவர் தான் பொறுப்பு என்றால் ? |
| பதில் | அதற்குரிய தயாரிக்கும் உரிய உரிமம் வைத்திருந்தால் தயாரிப்பாளர்தான் பொறுப்பு. இல்லையேல் அந்த மருந்து வைத்திக்கும் அனைவரும் பொறுப்பு ஆவார்கள். |
| கேள்வி | 4 வது எதிரி நிறுவனத்தில் எடுக்கப்பட்ட மருந்துகள் அனைத்து தரமான மருந்து என்பதால் மருந்து தரம் பற்றி விதிமுறைகள் மீறல் எதுவும் இல்லை என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | நீங்கள் மருந்துக்கான சட்டம் மற்றும் விதிகளை சரிவர பின்பற்றாமல் 4 ம் எதிரி மீது குற்றச் சாட்டு கூறியிருப்பது தவறு என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | பொதுவாக மருந்து உரிமம் பெற்ற நிறுவனங்கள் மருந்து உரிமத்தை ஒப்படைப்பு செய்ய உங்கள் துறைக்கு விண்ணப்பிக்கும் போது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ? |
| பதில் | அந்த மருந்து கடை எங்கு இருக்கிறதோ அல்லது மருந்து தயாரிக்கம் நிறுவனம் எந்த பகுதியில் இருக்கிறதோ அந்த பகுதி ஆய்வாளருக்கோ இல்லையெனில் முது நிலை மருந்து ஆய்வாளருக்கோ விசாரணை அறிக்கை கேட்கப்படும். |
| கேள்வி | அந்த விசாரணை அறிக்கையை அந்த நிறுவனத்தில் மருந்து வாங்கும் தரப்பினருக்கு தெரியப்படுத்துவீர்களா? |
| பதில் | அந்த மாதிரி நடைமுறை இல்லை. |
| கேள்வி | 1 ம் எதிரி நிறுவனம் எந்த மருந்து ஆய்வாளர் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது. ? |
| பதில் | அந்த நிறுவனம் அமைந்திருக்கும் மருந்து ஆய்வாளர் கட்டுப்பாட்டின் கீழ் வரும். |
| கேள்வி | அப்போது யார் மருந்து ஆய்வாளர் ? |
| பதில் | ஞாபகமில்லை. |
| கேள்வி | அப்போது மதுரை மண்டலத்தில் முதுநிலை மருந்து ஆய்வாளர் பெயர் என்ன ? |

| | |
|---|---|
| பதில் | முகம்மது கமால் என்பவர் பொறுப்பில் இருந்தார். |
| கேள்வி | இந்த வழக்கு சம்பந்தமாக மருந்து ஆய்வளர்கள் யாரையும் விசாரித்தீர்களா ? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | 1 வது மற்றும் 4 வது எதிரிகளுக்கிடையே மருந்த சம்பந்மாக எதாவது உடன்படிக்கை இருந்ததா ? |
| பதில் | அந்த மாதிரி ஆவணம் கிடைக்கவில்லை |
| கேள்வி | மருந்து பகுப்பாய்வு எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி விதிகளை சம்பந்தமான உங்கள் சாட்சியத்திலோ அல்லது குற்ற தனி புகாரிலோ சொல்லவில்லை என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | 4,5,6 எதிரிகளுக்கு தனிதனியாக விளக்கம் கேட்டு குறிப்பாணை அனுப்பினீர்களா ? |
| பதில் | 4 வது நிறுவனத்திற்கு மட்டும் அனுப்பியுள்ளோம். |
| கேள்வி | 4 வது நிறுவனத்தில் வேறு எந்த விதமான மருந்து சம்பந்தமான விதிமுறை மீறல் இல்லை என்று சொன்னால் ? |
| பதில் | ஆய்வின் போது இல்லை. |
| கேள்வி | படிவம் –18 மருந்துக்களை நீங்கள் சொன்ன தேதியில் பகுப்பாய்வுக்கு அனுப்பவில்லை என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | 4,5,6 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் அவர்களுடைய விளக்கங்களை சரிவர சட்டப்பூர்வமாக பரீசிலனை செய்யாமலும் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | இந்த வழக்கு தொடர்வதற்கு வாங்கப்பட்ட அனுமதி நீங்கள் முறையாக அனுப்பாமல் இயந்தரதனமாக அனுப்பியுள்ளீர்கள் என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | 1 வது எதிரி நிறுவனத்தை பொறுத்து உற்பத்தி உரிமம் பொறுத்து 13.08.2004 ல் இருந்து 12.08.2014 வரை செல்லத்தக்கதாக இருந்தது என்றால் ? |
| பதில் | சரியல்ல. 28.03.2013 ல் மருந்து உற்பத்தி மற்றும் விற்பனைக்கு இடைக்கால தடை மருந்து கட்டுப்பாட்டு இயக்குநரால் விதிக்கப்பட்டது. |
| கேள்வி | 28.04.2014 ல் மருந்து கட்டுப்பாட்டு துறை இயக்குநர் அலுவலத்திலிருந்து உதவி இயக்குநர் மதுரை மண்டலம் கட்டுப்பாட்டு துறை அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் 1 ம் எதிரிக்கு உற்பத்தி மற்றும் விற்பனைக்கு தடை செய்து அனுப்பப்பட்ட கோப்பு ஒரு வருடமாக நிலுவையில் உள்ளதாக மேற்படி கடிதத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் ? |

| | |
|---|---|
| பதில் | சரிதான். |
| கேள்வி | இது சம்பந்மாக அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது பற்றி இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் ? |
| பதில் | நான் சொல்லவில்லை. |
| கேள்வி | 1ம் எதிரிக்கு மேற்படி கோப்பு பற்றிய தகவல் எந்த தேதியில் அனுப்பியுள்ளீர்கள் என்ற ஆவணம் எங்கு உள்ளது ? |
| பதில் | அ.த.சா.ஆ.139 ல் உள்ளது. |
| கேள்வி | அதற்கான தபால் குறிப்புகள் ஏதும் உங்கள் அலுவலத்திலிருந்து எடுத்து இந்த வழக்ககில் தாக்கல் செய்துள்ளீர்களா ? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | 1ம் எதிரியின் நிறுவனத்தின் அசல் உரிமத்தை கைப்பற்றினீர்களா ? |
| பதில் | நான் பெறவில்லை. |
| கேள்வி | 2 மற்றும் 7 எதிரியின் நிறுவனத்திற்கு நீங்கள் நேரடியாக ஆய்வுக்கு செல்லவில்லை என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | வழக்கு எதிரிகள் அனைவருக்கும் நீங்கள் அனுப்பிய காரணம் கேட்ட தபாலுக்கு உரிய விளக்கம் அளித்துள்ளார்கள் என்றால் ? |
| பதில் | சரியல்ல. விளக்கம் கொடுத்தார்கள் ஆனால் ஏற்றுக்கொள்ளும் படி இல்லை. |
| கேள்வி | 2ம் மற்றும் 7ம் எதிரிகளுக்கு மருந்துகள் வாங்கி விற்பனை செய்யும் உரிமம் இருந்தது என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | 2ம் மற்றும் 7ம் எதிரிகளுக்கிடையே வியபாரம் சம்பந்தமாக ஒப்பந்தம் எதுவும் பார்த்தீர்களா ? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | அவர்கள் கடன் உரிமம் எதுவும் பெற்று இருந்தார்களா ? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | 7ம் எதிரி நிறுவனம் 1ம் எதிரி நிறுவனத்தின் தயாரிப்பான புரோபிட்டால் மருந்து என்ற மருந்து மட்டும் தான் 2ம் எதிரிக்கு விற்பனை செய்திருந்தார் என்றால் ? |
| பதில் | சரிதான். அதற்கான பகுப்பாய்வு அறிக்கை தரம் இருந்ததாக உள்ளது. அந்த மருந்தை 4வது எதிரியிடம் இருந்து கைப்பற்றினேன். |
| கேள்வி | உங்கள் விசாரணையில் 2 முதல் 8 எதிரிகள் மருந்து உற்பத்தியாளர்கள் இல்லை என்று சொன்னால் ? |
| பதில் | சரிதான். |

| | |
|---|---|
| கேள்வி | 2 முதல் 8 எட்டு வசம் இருந்து பகுப்பாய்வுக்கு எடுக்கப்பட்ட மருந்துகளின் மூலப்பொருள் எதுவும் எடுத்தீர்களா ? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | அவர்களிடமிருந்து மருந்து தயாரிக்கும் இயந்திரங்கள் எதுவும் எடுத்தீர்களா ? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | 1ம் எதிரி நிறுவனத்திடமிருந்து எந்தவிதமான பதிலும் நீங்கள் வாங்கவில்லை என்றால் ? |
| பதில் | அவர் அனுப்பவில்லை. |
| கேள்வி | 1ம் எதிரி நிறுவனத்திடமிருந்து எந்த இயந்தரமோ அல்லது மூலப்பொருட்களோ கைப்பற்றவில்லை என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | ஆகையால் 2 முதல் 8 எதிரிகளை பொறுத்து வழங்கப்பட்ட குற்ற வழக்கு நடத்ததுவதற்கான அனுமதி ஆணை சட்டப்பூர்வமாக பரிசீலனை செய்யாமல் உரிய மனுவை செலுத்தாமல் அனுமதி வாங்கியது தவறு என்றால் ? |
| பதில் | சரியில்லை. |

மறு விசாரணை இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 01.02.2025 அன்று சனிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2025.02.01 17:05:37 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.

01.02.2025.